தேசீயப்பாட்டு.

இஃது

போடிநாயக்கனூர் வித்வான் ஸ்ரீலஸ்ரீ,

கு. பாலசுப்ரமண்ய பாரதியவர்கள்

மாணவர்களால் இயற்றப்பெற்று

அவருள்

வா. சை. ஷாகுல்ஹமீது **ராவுத்தர்** அவர்களால்

தொகுக்கப்பட்டு

ஷெயூர் பிரபல மிராசுதார்

ஜனாப் ந. பீ. காதர்ஷேக்மீரு ராவுத்தர் அவர்களால்,

போடிநாயக்கனூர்

"ஹக்கீம்" பிரஸ், என்னும் அச்சேந்திரச்சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] **1922** [அணா 4.

894.8111
2948

172442.

இறைவன் துணை.

வந்தே மாதரம்.

தேசியப் பாட்டு.

முதற்பகுதி.

13 OCT

பாரதமாதாவின் துதி.

வந்தேமாதரம் அம்பிகாம்பகவதீம் வாணீரமாஸேவிதாம்
கல்யாணீம் கமனீய கல்பலதியாம் கைலாஸ நாதப்ரியாம்
வேதாந்தப்ரதி பாத்யமானுவிபவாம் வித்வந்மனோரஞ்ஜனீம்
ஸ்ரீஸக்ராஞ்சித ரத்நபீடநிலயாம் ஸ்ரீராஜராஜேஸ்வரீம்.

1. தாதாபாய் நௌரோஜி.

'மோகமாகினேனே' என்ற மெட்டு.

இராகம்—இ. பியாக் தாளம்—ஆதி.

பல்லவி

தாதாபாய் நௌரோஜி—வெகு
காலமாகப்பேசி (தா)

அநு பல்லவி

தாய்நாடித் தன்மையேபெற வுண்மையூழியக்
கண்யஞ்செய்தனர் (தா)

சரணம்

சுய-ராஜ்யமென்னும்பேச்சு—நாம்
சொல்வதவாலாச்சு

சொந்தநாட்டின்நாட்டம் சுதேசக்கைத்தொழிற்றேட்டம்
சொல்லாரும்பூவில்வெம்பும் எல்லாருங்கூறில்நம்பும் (தா)

சதுர்-வேதசாரங்கண்டோர்—பல
போதஞானங்கொண்டோர்
வேண்டுவிதத்துத்தலைவர் உளந் தூண்டுமுறைமைக்கலைவர்
மிகுந்தவயதுக்கிழவர் நீதி யறிந்துதவிடும் உழவர் (கா)

எம—துரிமைகளேயேசாற்ற—படும்
அரசினிலேயைமாற்ற
இந்தியாவிற்கென்று முனம் இங்கிலாந்திற்சென்று
மந்த்ராலோசனைச்சபையார் முன் வாதுபுரிந்தபெரியார் (கா

---

2. லாலா லஜபதிராய்.

'நைனஜோபன்' என்ற மெட்டு.
இராகம்-இ. தோடி தாளம்-ஆதி.

பல்லவி

உழைப்பாளியான லாலா லஜபதிராய் (லா)

அநு பல்லவி

இளைப்பொன்றுமில்லாதே இந்தியாவென்னுந்தேசம்
ஈன்றமக்களிடத்தே என்றும்நேசம் (லா)

யானைவரும்பின்னேமணி யோசைவரும்முன்னேயென
யாரும் சொல்லும் மொழியைத் தேறுமென்ற (லா)

பஞ்சாபிப்பத்திரிகைக்குப் பாவலர்விஷபதானம்
பண்ணியூழியஞ்செய்யப் பரிந்துநின்றார் (லா)

தயானந்தஸ்வாமிபோதம் தாங்கும் ஆர்யசமாஜம்
தனையாதரித்தமூவர் தனில் ஒருவர் (லா)

கல்கத்தாமகாணநாட்டிற் காந்தியின்கொள்கை நாட்டில்
காணலாம் சுயராஜ்யம் கண்ணாலென்ற (லா)

---

3. மகாத்மா காந்தி.

'ஆயாங்கரோ' என்ற மெட்டு.

இராகம்-பியாக் தாளம்—ஆதி

பல்லவி

மகாத்ம காந்தி சொல்லும் மந்திரம் தரும் சாந்தி (ம)

அநு பல்லவி

தகாப்படுகொலைக்காதாரம் சகோதாடயர்கள் வீரம்
தானன்றிப்பஞ்சாபிகள்மேல் எதுண்டுமஞ்சாரினிமேல் (ம)

தோஹையரா

மாக்ஷிமை தங்கிடும் ஆங்கில ராஜிய மன்னர் நீதிச்
சூக்ஷமம் ஈதெனிலிந்தியாவடையுமோ சொல்லுநீதி (ம)

பாட்டு

இஸ்லாம் மதத்தலைவர் என்றுவிளங் கும்மிறைவர்
இழந்தஸ்வாதீனத்திற்கு வருந்திப்புலம்புதற்கே (ம)

தோஹையரா

எந்நாளில் மக்கமதி னந்தனிற் கிறிஸ்துவர்
இருந்தே யாண்டார்
இந்நாளி லந்நிலைமை வந்ததென வேகண்ட
எவர்தாம் தூண்டார் (ம)

பாட்டு

அரசாங்கச்சேவைபெற்று ஆதரித்தகல்விகற்று
அன்பேயில்லாதவேசைக் களித்தோமேலேசிற்காசை (ம)

---

4. வந்தே மாதரம்.

'காதலென்பதையே' என்றமெட்டு.

இராகம்—கல்யாணி தாளம்—ரூபகம்.

தேசியப் பாட்டு

பல்லவி

வந்தே மாதரமே—தேச
வாம மேவு தேவ நாமம் (வந்)

அநு பல்லவி

பந்தபாசம் போக்கு மந்த்ரம்
பாலரைத்தொண்டாக்கு மந்த்ரம்
சிந்தை கொண்டோர் வாழு மந்த்ரம்
சேதி யீது நீதான் ஓது (வந்)

பாரத மாதாவின் கோலம்
பார்க்க வீதோ நல்ல காலம்
சாரமாம் சுயாக்ஷிச் சீலம்
சாது போத நீதி யோது (வந்)

இந்தவேளை யன்பு கொண்டு
ஏகஜாதி போலே நின்று
நந்தம் பாத்தியதையிற் றெண்டு
நாட்டம் வெட்டும் வாட்டம் ஓட்டும் (வந்)

---

5. பால கங்காதர திலகர்.

'கருணைகரீகேளரீ என்ற மெட்டு.

இராகம்-இ. காபி தாளம்-ஆதி.

பாலகங்காதர திலகருபதேசம் பாகவதாகிதோபதேசம்
படித்துணர்விதமே நடித்திடலானர்
பாரதநாடொன்றுய்ச் சேரவேணுமென்றே
பக்தியுடன் தியானம் செய்தாரே—அவர்
பணித்தவேலையிலுழைப்பீரே (பா)
தேசாபிமானஞ் சிறந்த மகோத்தமர்

சேவைசெய்தே வாழ்பவரானர்
சித்தத்திலேகாண் சுத்தமாவீரரைச்
சீஷர்போலே நின்று பேசுமுறைகொண்டே
சிந்தையிற்சுயராஜ்ய மடைந்திடு வழிகளைச்
சிந்தித்துவாழ்வதுந்யாயம் (பா)

---

6. ரபீந்திர நாதத் தாக்கூர்.

• 'கருதாருகருபரு ஆலா' என்ற மெட்டு.
இராகம்-இ. செஞ்சுருட்டி தாளம்-ஏகம்.

பல்லவி

ரபீந்திர நாதத் தாக்கூர்—என்
நாளும் போற்று மாக்கூர் (ர)

அநு பல்லவி

ரஸம் நிறை மொழியால் இசை தரும் கவிசேர்
நாவல ரேபுகழ் பாவல ரென்போம் (ர)

சரணம்

கனம்பெறும் பாரத மாதா—தனைத்
தினந்தொறுந் தொழுதிடுந் தாதா
கடவுளின் னருளாற் பலவியல் பகிர்வார்
கருணையி னுருவே யெனவே சொல்வார் (ர)
வரும் சம்பவங்களைச் சேர்த்து—ஓர்
வழுவு மிலது கவி யார்த்து
வாழ்கின்ற மாந்தர் தாம்பெறற்கீந்தார்
மகிழ்தரும் அகவிழி வசமுறக் கண்டார் (ர)
சாந்தி நிகேதன வாசர்—அங்கு
சகல கலையுதவும் நேசர்
'சாதனு' முதலிய கோதறு நூல்கள்
சரபம் புரையப் பொழியும் புலவோர் (ர)

---

7. சித்தரஞ்சனதாஸ்.

'ராமபஜன' என்ற மெட்டு.

இராகம்—தேசிக முகாரி தாளம்—ஏகம்.

பல்லவி

சித்தரஞ்சனதாஸ்போதம்—சீர்தாங்குநீதம் (சி)

அநு பல்லவி

நித்தந்தேசத்தின்சேவைப் பக்திசெலுத்திவரின்
நிச்சயம்வீடுசித்திக்கும்—என்றேவுரைக்கும் (சி)

தன்னலங்கருதாது தாய்நாட்டின்குறையோது
நன்னயமொழிபடைத்தோர்—நல்லெண்ணம்வைத்தோர் (சி)

செல்வமில்லாதுவந்து உள்ளதெல்லாங்கவிர்ந்து
சிறந்தவர்த்தகருபாயம்—செய்யுமோருபாயம் (சி)

இந்துமுஸ்லீமொற்றுமை என்றைக்கடையுந்தன்மை
இந்தியாபெறுமவ்வேளை—இதஞ்செய்காளை (சி)

---

8. ரோமேஷ்சந்திரதத்தர்.

'நினைந்து வந்தேன்' என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

பல்லவி

ரோமேஷ் சந்திர தத்தர் தந்திடு நூலாய்ந்தறிந்தவர்கள்
ரோமாபுரியைப்போலவே—சுயநாடுபெற்றுச்
சீமான்களென்னவாழவே (ரோ)

மகுடம்

ருசிக்கு மொழிக்கு மதிப்பை விளக்கும் (நூ)
ரீதிமுற்று மாறுபட்டு நீதிசற்று மேபுகட்ட (நூ)
ரஞ்சித வஞ்சமே நெஞ்சினி லென்றுரை (நூ)

நாடுவாழக் கூடியாளப் போதுமான நீதிசார (நா)
வஞ்சக நெஞ்சினர் அஞ்சிடும் அம்சுடை (நா)

அநு பல்லவி

நாறுமிரகசியமாகாது—பெரும்
ராணுவச்செலவுமேகுறையாது
மாறுபடாவரிகிடையாது—தேச
வர்த்தகமுண்மை யெவரிலவாது
மனிதநிறத் தாற்பேதம் ஏது—என்றுமேயோது (ரா)

---

9. அலி சகோதரர்.

'நானிலம்போற்றுங்கவிச்சக்ரவர்த்தி' என்ற மெட்டு.

இராகம்--செஞ்சுருட்டி தாளம்—ஆதி.

இந்தியா பட்ட கஷ்டம் எங்கள் தென் ஆ வரும்
இசுலாமதத்திலுதித்தோர்—சுயராஜிய
அசுவம்வாங்கவேயுழைத்தோர்
இடருற்றலேகிற பொழுதிற்றனிவழி
யிதுதக்கதுவென மொழியக்கருதுவர்
யந்தலாம் முகம்மதலி—அவர்சோதரர்
சாந்தவான் ஷவுக்கத்தலி (இ)

இந்துமுஸ்லீமொற்றுமை யேற்றந்தருமெனவே
யெங்குமுபதேசிப்பவர்—சிறைச்சாலேயே
தங்க வரினும் நிற்பவர்
இச்சமயத்தினில் மெச்சிடுகைத்தொழில்
இச்சைகிளப்பிடு பட்சமிகுத்தவர்
ஏந்தலாம் முகம்மதலி—அவர்சோதரர்
சாந்தவான் ஷவுக்கத்தலி (இ)

இருபதாம் நூற்றுண்டதின் தருமயுத்தத்தின்பின்னர்
இயல்புள்ளமஹான்கள் கூடி—உடன்படிக்கை
பயந்தரமுடித்தார் தேடி
இனியெவிதந்தா னிலகுமதத்தார்
இதயமகிழ்ந்தே மலருவரென்ற
எந்தலாம் முகம்மதலி—அவர்சோதரர்
சாந்தவான் ஷவுக்கத்தலி (இ)

---

10. யாகூப் ஹஸேன்.

'ஹமார நபி' என்ற மெட்டு.

இராகம்- அமீர்கல்யாணி தாளம்-ஆதி.

பல்லவி

யாகூப்ஹஸேன்போலேயார்க்குண்டாமே எண்ணம் (யா)

அநுபல்லவி

நாகூற லொன்று நாம் செய்யலொன்று
நலமுறப் புரிசெய்கை பலனில்லை யென்றுகண்ட (யா)

தோஹையரா

பதார்த்தமாய் மாகாண சட்டசபைய கன்றதாங்கி
பதாத்தமாய்ச் சுயராஜ்ய மடைதற்கு வழியான
பண்பி லோங்கும் (யா)
தேசீக விஷயம் தெரிவ தவசியம்
தினமுமே மனதுடன் ஜனங்களுக் குழைக்கின்ற (யா)

தோஹையரா

தேசபரி பாலன முதன்மையாய்க் கருதிடும்
திகழிரா ஜாங்க மூற்றூர்
தோசமுழு துங்குடி வகித்திடும் பாதகர்க
டுணைவர்போற்றேற் றுவித்தார் (யா)

---

11. சரோஜினி தேவி.

'ராம மனோரத' என்ற மெட்டு.

இராகம்-மால்கோஷ் தாளம்-ஏகம்.

பல்லவி

தேவி சரோஜினி பாதை தனி (தே)

அநு பல்லவி

ஆவியோடுட்டலும் அலையவருமோ
அற்புதமாகிய நீதி—இதோ நல்ல நீதி—இதோ
பெரும் நீதி—இதோ (தே)

தொஹையரா

அயலாரிடத்திலே யடிமைபோல்வாழ்வதிலாசையுண்டோ
சுயராஜியத்தினின்பத்தையேபெற்றிடத்தூண்டுமென்ற(தே)

பாட்டு

நீதியீதென்று ஓதுதல் தவறே
நிச்சயமாய்ப்பலனே—பெறுவாய் கதியே—பெறுவாய்
நிதியே-பெறுவாய் (தே)

தொஹையரா

நிசமானவொற்றுமை யடையாவரைக்கும் நிதமுமுண்ணும்
ரசமான வுணவிலும் அழகாரும் உடையிலும்
[ரமிக்கத்துண்ணும் (தே)

---

12. அரவிந்தகோஷ்.

'தினந்துதிப்பாய் நெஞ்சே' என்ற மெட்டு.

இராகம்-பியாக் தாளம்-ஏகம்.

பல்லவி

அரவிந்தகோஷ் நெஞ்சம் அறிந்தவர் எவரோ (அ)

அநு பல்லவி

சிறந்திடும் ஞானம் செறிந்திடுந் த்யானம்
செய்வதனுற் பயனுய்வதை யோது (அ)
பாரதயோகி பணிசெய்தியாகி
பரந்தகல்வி யிருந்தும் அறந்தவறுதார் (அ)
மாணவர் ஆர்வம் மதித்துமே பூர்வ
வழியினில் நடைபெறும் மதக் கல்வி தந்தார் (அ)
'வந்தே மாதரமும்' வழுத்தும் 'ஆரியமும்'
வகையாய் நடத்தியதில் மிகை யென்ன லாமோ (அ)
வங்காள வெடிக்குண்டு வதந்தியைக் கண்டு
வருநத அரசியலார் சிறைக் கோட்டத் தானர் (அ)

---

13. பாஞ்சாலப் படுகொலை.

'வண்ணத்திணைமாவை' என்ற காவடிச்சிந்தின் போக்கு.

அநியாயம் அநியாயம் அநியாயம்—இது
ஆருங் கேட் டறியாத அநியாயம்
சனியாகப் புவிமீதிற் பழிகாசப் படுபாவி
சதியாகப் பலபேரைச் சரிசெய்த கொடுமோசம்
சாற்றிடிற் கண்ணீரும் ஓடுமே—அதைத்
தேற்ற மன தெண்ணி வாடுமே (அ)

ஆட்சி செய் யாங்கில ரெண்ணமே—காணச்
சாட்சிய மாமிது திண்ணமே
அமரிக்கை நாடெங்கும் பரவச் சூதேதங்கும்
அடிமைச் சட்டந் தந்து குடிசுட்குப் பயமிஞ்சி
அழுதபேரெத்தனை கோடியே—கூறின்
பழுதுண்டுமோ? சொல்வாய் நாடியே (அ)

பாஞ்சால தேசத்துப் படுகொலை—கண்ணுற்
பார்த்துச் சகித்தவ ரேயிலை
பகிதாகத் தொடுகூடும் மடமாதர் தமையோடும்
படிசெய்து அவமானம் பலதந்த விதோஞானம்?
பாங்கு தெரிந்தா லறிந்துகொள்—உண்மை
தாங்கும் வழியை யுணர்ந்துகொள். (அ)

பெண்டு பிள்ளை யென்றும் பாராமல்—எங்கும்
உண்டு தெய்வமென்றும் ஓராமல்
பிறரிஷ்டப் படிகஷ்டப் படுதற்குப் பதில்நஷ்டம்
பெரியோரின் முறைதேரின் பலனாகும் எனவோதும்
பேச்சைக் கேட்டோரையே சுட்டனர்—மேலின்
பூச்சை யடியோடே விட்டனர் (அ)

நெஞ்சாலே வீதி கடத்தினர்—சவுக்கால்
அஞ்சாது சுண்டி யடித்தனர்
நிசமாகப் பிணமாக விழிகாண மனம்நோக
நிமைவேளை யதன்மீது காமேவச் சகியாத
நீசனும் பூமியிலுண்டுமேல்—எங்கும்
பேசிடும் நீதியும் சுண்டுமே (அ)

இக்காரியம் செய்யும் பாதகன்—பூமியில்
எக்காரியம் செய்யான் காதகன்
இனிமேலும் இதுபோலச் செயல்காண மனம்நாட
இழிவாகக் கருதாது புகழ்பேசிச் சுடர்வாளை
ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினர்—இந்தக்
கூற்றை யாதரித்தே தூண்டினர் (அ)

14. ஒத்துழையாமை.

'ஆநந்தமாநந்தம்' என்றமெட்டு.

இராகம்-இ.தோடி தாளம்--ஏகம்.

பல்லவி

சேருங்கள் சேருங்கள் சேருங்களே—பலன்
பாருங்கள் பாருங்கள் பாருங்களே (சே)

அநு பல்லவி

சித்தாதி யுரைத்த முறை செப்பியதாலேதுகுறை (சே)

சரணம்

கோரும் சுயராஜ்யம் பெற்றிடக் கூடி
கூறி யொத்துழையா மைக்குளம் நாடி
வாரும் உழைக்க மகிழ்ந்துமே தேடி
வஞ்சகமேன் நெஞ்சதிலே அஞ்சுவதேன் கொஞ்சமுமே(சே)

நினைக்க முடியாத பஞ்சாப் படுகொலை
நீதமில் டயர் தானுக்ச் செய்தநிலை
துணைக்கு இருந்த ராஜாங்க நெறிநிலை
தொந்தரவு தந்ததினு லிந்ததினம் வந்ததெனச் (சே)

தேசத்திற்காக வுழைத்திடநாடு
தீயசெயல் புரிவதைவிட்டோடு
கூசத்தகுந்ததி தன்றெனப்பாடு
குற்றமிலா வொத்துழையாப்பெற்றிவழி பற்றிடுவோம்(சே

---

15. நூல் நூற்றல்.

'சுனேசாஹிப் மேராதில்' என்ற மெட்டு.

இராகம்-தே. செஞ்சுருட்டி தாளம்—ஆதி.

பல்லவி

நூற்று நெசவுசெய்ய முன் வருவீர்—நூல் (நூ)

அநு பல்லவி

தூற்றும் அடிமைத்தனக் காற்றுக்குளடைத்துமுன்
னேற்றந்தடுத்துவரும்—கூற்றைவிலக்க (தூ)
வீட்டுக்கொரு ராட்டினம் பூட்டுவதே நமது
நாட்டினதூழியமே—வேட்டையெனவே (தூ)
கைத்தொழில் மாயவே வைத்தவர்மாயமே
பொய்த்திடவேசகாயம்—இத்தினமுதல் (தூ)
அன்னிய நாட்டுக் கண்ணியத்துணியை
எண்ணிடாத சபதம்—எடுத்துக்கொண்டோம் (தூ)

---

16. நாயகி, தன் நாயகனிடம் பாரத மாதாவின் பரிதாப நிலை கூறுதல்.

'மீனாட்சிரமணா' என்ற மெட்டு.

இராகம்–இ. பியாக் தாளம்–ஆதி

பல்லவி

பாரத மாதா—பரிதாபங் காதிற் கேள் நாதா (பா)

அநு பல்லவி

வீரரை யீன்றும் விருந்தினர் போன்று
வேண்டுபவைகளைத் தூண்டியடையவே
ஆண்டுவருபவர் தாண்ட அழுகிற (பா)

பாவமே யல்லவோ பரிந்துநான் சொல்லவோ
பாரினிலே பழி சாரிடிலே துணை
யார்கொளுவாரென நீர்தனியாயுவீர் (பா)

சாந்திமிகுந்துவோங்கும் காந்தியடிகள் தாங்கும்
சகலவைராக்கிய வுதவிமறுத்தலிற்
பகலிரவும்உழை மகள்மகனென்றுரை (பா)

---

17. தேசாபிமானம்.

'ஜமு நாத்தட்டே' என்ற மெட்டு.
இராகம்—மால்கோஷ். தாளம்—ஏகம்.

பல்லவி

நம்பிவாழ்வதோ—நாமடலானோரை (நம்)

அநுபல்லவி

வம்பே யில்லாது வதைத்திடத்தோது
அம்புவி மீதிவர் செய் போதும் (நம்)

சுதந்திர மாட்சி சொலினென்ன தாட்சி
சுகம் பெற என்றுமே நாடாதே (நம்)

ஆட்சிக்குள்ளானோர் அடங்கிடவேண்டும்
அதுவே முறையென்னும் ஆசாரம் (நம்)

நிற பேதம் கொண்டு நேரிலே தூண்டு
நினைக்கும் சமயங்களில் செய்தாரே (நம்)

போது மநீதி பொறுப்பதோ நீதி
போற்றுந் தேசாபிமானம் காட்டாமல் (நம்)

தேசிக வுணர்ச்சி சிறந்துமே கிளர்ச்சி
செய்யுந் தருணம் வந்தும் சேராமல் (நம்)

முதற்ரெகுதி முற்றுப் பெற்றது.

இறைவன் துணை

சென்னை-600 008.
17247

வந்தே மாதரம்

இரண்டாந் தொகுதி.

18. வந்தேமாதரம் சொல்லுதல். க.

'இன்னுந் நாமதம் யாதம்மா' என்ற மெட்டு.

இராகம்—சங்கராபரணம். தாளம்—ஆதி.

பல்லவி

வந்தேமாதரம்புகல்வாம் —நொந்தேவாழ்குவதகல்வாம் (வ)

அநு பல்லவி

எந்தவாறு துயர் வந்துபோதும் எம
திந்தியாவில் நாட்டம்—இத
யந்திராணி யாட்டம்—பொரு
ளுந்தயார்செய்வேட்டம் என்றும் (வ)

சொந்தமான மதி வந்ததாலினியெ
ழுந்துவேலை செய்வோம்—புகழ்
முந்தமானம் உய்வோம்—அர
விந்த மாரி பெய்வோம் என்றும் (வ)

உற்பவிக்குமித சொற்பனத்துமினி
யொத்துழைக்க மாட்டோம்—அடி
மைத்தனத்தை நாட்டோம்—நிலை
யைப் பழித்து வாட்டோம் என்றும் (வ)

கற்பவற்றைநெறி யிற்படித்துவழி
நிற்பதற் கிசைந்தோம்—அதி
நித்தியத்தடைந்தோம்—பெரும்
பெற்றிபெற்றுவந்தோம் என்றும் (வ)

O-1, 1MRD21 N

அஞ்சலோட மகி ழெஞ்சவே கொடிய
பஞ்சமோடு வாழோப்—உயிர்
துஞ்சநாடி வீழோம்—பிர
பஞ்சமீது தாழோம் என்றும் (வ)

நஞ்சமாகிய ந புஞ்சகாதி மொழி
கொஞ்சமேனு மதியோம்—மன்
வஞ்ச மேவி யுதியோம்—அன்னை
செஞ்சொலோது புதியோம் என்றும் (வ)

பண்டை நாள்முதலி ரண்டு சாதியல
துண்டுமோ நம் ஊவீடே—இது
கண்டு சேர வீடே—புகழ்
மண்டலாகும் நாடே என்றும் (வ)

தொண்டவாவளர் தெ ருண்ட ஷாகுலமீ
தன்னையோது தாயே—யாம
ருண்டிடாது நீயே—உயர்
வுண்டு வாழ்துவாயே என்றும் (வ)

---

19. பாரதமாதா. உ.

'பாதுகையே' என்ற மெட்டு.
இராகம்—ஆரபி தாளம்—ஆதி. (ரூடுகு)

பல்லவி

பாரதமே—எங்கள்
பவவினை தொலைப்பதும் தவநிலை கொடுப்பதும் (பா)

அநுபல்லவி

சார மிகுந்தொளிரும் தாயென நாளும்
தாரணி புகழ்ந்திட நேசற வாழும் (பா)

சரணம்

பார்ப்பவருளங்கவர் பாவனமேவிப்
பாதமடைகுநரைப் பரிக்குந்தந்தாவி
தீர்ப்பரு மிடியினைத் தீர்க்கும் சஞ்சீவி
தீவிரத்தொடு புகழ் செயித்த நம்தேவி (பா)

பாதைவிலகித் திகைப் பவர்க்குக் கைகாட்டி
பாய்மரங் கவிழ்ந்தலை பவர்க்குயிர்மீட்டி
வாதை தவிர்த்துதவி மகிழ்ந்திடும் பாட்டி
மாசறும் புலமையில் வரும் பெருமாட்டி (பா)

ஆர்ப்பரித்திடு சங்கம் அளித்த முத்தினமே
அழகிணைப்புரி மலை யரண் கடல் வனமே
போர்ப்பெனத் தினந்தொறும் பொருந்து விற்பனமே
பொன்னுல கிருப்பரும் புகழும் பொற்பனமே (பா)

ஆத்துமமுயர் சுத்தி யடைகிற பேறே
அளிக்குந்தெய்வீக வ முதப்புனல் யாறே
நேத்திரப் பயனென நிறைந்துவோ ரீறே
நினைக்கரிதாமெனும் நெறித்தெது வேறே (பா)

†சூர்ப்ப வஞ்சக ருள்ளம் துளிர்த்த நல்வீரம்
தோய்ந்ததிது வென்றுரை சொலு மிகத் தூரம்
நேர்ப்படும் குணவியல் நிகழ்த்தி னபாரம்
நீதமென் றுலகு சொல் வதி னுயர் சாரம் (பா)

சோதரத்துவ மிகத் துலங்கு முபாயம்
தோன்றிப் பதினெண் மொழி சூடிய தேயம்
ஆதரந் ததும்பிய தகன்றது மாயம்
ஆரு முணருவதற் கரியவிராயம் (பா)

---

†சூர்ப்ப—சுழல

தேய்ப்பருந் தனமிகத் திரட்டிடுங் ‡காந்தி
தேசம்பலவும் பிழைத் திடுமதை *மாந்தி
வாய்ப்பருங் கலைபல வகுத்த வேதாந்தி
மாதவம் புரிபவர் களுக்குப சாந்தி (பா)

தேருயர் குஞ்சரம் துரக பதாதிச்
சேனைகளொடு தமிழ் அரசர்களாதித்
தாருயர் நெஞ்சுகண் டுவந்திடுந் தாதி
ஷாகுலமீது செந் தமிழுறுங் க்யாதி (பா)

---

20. சுதந்தரா தேவி. ரூ.

'பூரணனந்த வைபோகா' என்ற மெட்டு.

இராகம்—இ. தோடி தாளம்—ஆதி.

பல்லவி

சுதந்தரா தேவி யயிராணி—கல்யாணி
சுவங்கிர்தா வேணி (சு)

அநு பல்லவி

நிதத் தரா தீன மக ராணி—நிர்வாணி
நிரஞ்சனம் பூணி (சு)

தொஹையரா

சுப்மதுகைவாசனி யுபயமலர் லோசனி துருவாசனி
இபகுணவிலாசனி யெளியர் பவகாசனி இதிகாசனி

பாட்டு

சுதருமாபரண நிதியமா சரண
சுந்தரீ—செக நி—ரந்தரீ—கவுரி
உதயமேவருண உடலியேதருணம்
ஓதிய ஷாகுல மீதுயர் பாவணி (சு)

---

‡காந்தி—பிரகாசம் *மாந்தி—குடித்து

தோஹையரா

அபயமெனவாயினேனும் பதமலரினலயம் அருள்வாயம்மே
சபலமினியாகவே மனதிலுதி யெண்ணமே தளாதும்மே

பாட்டு

அருமையாகும்எம துரிமையாவுமுற
ஆசியே—மகிழப்—பேசியே—நிதமும்
தருமமேயவனி முழுதுலாவிடநின்
தண்ணரு ளீகுவை விண்ணிடு வானெனச் (சு)

---

21. பாரதமாதாவின் நிலைமை. ச.

ஆனந்தக் களிப்பு.

நீதியறிந் தென்ன லாபம்—அதன்
நேர்மை கடைப்பிடி யோமெனிற் பாபம் (நீ)

க. வீதியில் நின்றொரு மாது—இன்று
மேலணி யொன்று மணிந்துகொள்ளாது
சோதி வளங் குறையாது—உள்ளம்
சோக மிக்காகப் புலம்பிய போது (நீ)

உ. சாதியி லுன்னத மானாள்—மிக்க
சாதுர்ய மேநிறைந் தோதிடு வாளுள்
மேதினி யெங்கணு மேனாள்—புகழ்
மேவியிலங்கினள் வீழவும் ஆனாள் (நீ)

ங. ஒப்புயர் வின்றி வளர்ந்தாள்—அவள்
ஓங்கிய செல்வத்தி னூடு பிறந்தாள்
செப்பரிதென்னச் சிறந்தாள்—இன்று
சேத முண்டாகித் திகைத்திட வந்தாள் (நீ)

ச. எப்பொழுதுங் கலைஞ்ஞானம்—அவள்
ஏதமில்லாருக் கிரங்கிடுந் தானம்

துப்புறவாகிய வானம்—வீழத்
தோகை வருந்தித் துடைத்தனள் மானம் (நீ)

ரு. வண்ண மிகும் பலகோடி—உயர்
மக்களை யீன்று மகிழ்ந்தனள் நாடிப்
பண்ணும் பனுவலும் பாடி—மிகப்
பாங்கி லிருந்தும் பதறினள் வாடி (நீ)

சு. எண்ணரிதாகிய சந்தம்—பாவித்
தேற்றுந் தமிழி லிரங்கிடச் சொந்தம்
பண்ணிய பாவலர் ந்தம்—இன்றிப்
பாரிற் பயந்தும் பதுங்கிய தந்தம் (நீ)

எ. நித்தியமாக நிலைத்தாள்—அவள்
நீசருறவை நிறுத்துத் தொலைத்தாள்
சத்தியமாமித யத்தாள்—குறை
சாற்றித் தவித்துச் சலத்தை வடித்தாள் (நீ)

அ. கத்துகடற் புவிமீது—இனிக்
காரிய மிஞ்சி விடின் றுயர்க் கேது
பத்தி செயத் தவறுது—நெஞ்சம்
பாரதத் தாயைப் பணிந்திட வோது (நீ)

கூ. பெற்று வளர்த்த நம் மாதா—அருள்
பேணுவதாலேநம் பிடையறுதா
முற்றுமகிழ்ச்சி யுறுதா—பின்னும்
மோட்சமெனும் பெருங் காட்சிதராதா (நீ)

ய. கற்றவற்றின் வழிநிற்பீர்—இனிக்
காதகர் நேசந் தள்ளாடச் சிறப்பீர்
சற்றுமயங்கலொழிப்பீர்—கவி
ஷாகுலமீதுசொற்றேனை மடுப்பீர் (நீ)

22. பாரதமாதா தன் மைந்தர்களிடம் பரிவு கூறுதல். ரு.

'பரத்தையென் றேசுகிறார்' என்ற மெட்டு.
இராகம்—நாதநாமக்கிரியை தாளம்—ஆதி.

பல்லவி

குழந்தைகளா வருவீர்—எந்தன்
குறை களைந்தே தருவீர் (கு)

அநு பல்லவி

இழந்தனன் ஸ்வாதீனம் எனக்கில்லை போமானம்
இடிந்திடுமே வானம் (கு)

சரணம்

சுதந்தரமல்லவா உயிரெனச் சொல்லுவார்
சுகந்தனையே வெல்லுவார்—அந்தச்
சுதந்தரமில்லையேற் பிணமெனச் சொல்லுவார்
துணிந்துடனே தள்ளுவார் (கு)

இதம்பெற வாழ்வதே யிலையெனிற் பூவிலே
இறந்திடல் நன்றல்லவோ—யானும்
எவனுமில்லாதவா றிடும்பைக ளாவதால்
எனக்கு மஃதே யல்லவோ (கு)

மகிழ்ந்துமை யீன்றவள் வயிறெறிந்தே திட
மனந் தளரும் போதிலே—நீங்கள்
வணங்கி மகேஸ்வாற் கியன்றிடும் பூசையால்
மயங்கிடுவேன் றீதிலே (கு)

புகழ்ந்திட வாழ்ந்ததும் இகழ்ந்திடத் தாழ்ந்ததும்
புரிந்த வினைச் செய்கையே—இன்னும்
பொதிந்தநம் பேதமை யகன்றிலையேலினிப்
பொருந்திடுமோ வுய்கையே (கு)

சிறந்திடுந் தாய்மொழி துறந்தொரு வாசகம்
தெரிந்திடற் கேதில்லையே—ஈதைத்
தெளிந்துணர் ஞானியும் தொழுந்தன தாயினைத்
தினங்கடந்தோ செல்லையே (கு)

பிறந்தவர் போலவே பிறநிலப் பாஷையைப்
பெருங்குணமாய்ச் சொல்லுறீர்—நெஞ்சம்
பிளந்திடவே நமா துடை நடை பாவனை
பிரிந்துயிராய்க் கொல்லுறீர் (கு)

தொலைத்தவ ராகினீர் தொழில்முறை யாவையும்
சுணங்கி வந்தே நிற்கிறீர்—மேலும்
தூயின்றிருப்பீரெனில் அசுன்றிருப்பீருயிர்
சுயத்தை யின்றே பற்றுவீர் (கு)

தலைத்தலையாய் வந்த முறைப்படியேசொந்தத்
தாரத்தினையே தேடுவீர்—புகழ்
தரித்த ஷாகுல்லமீ தெடுத்திவண் நல்கிய
தமிழ்த்திறமே நாடுவீர் (கு)

---

23. காலத்தோடியைதல். சூ.

'வருத்துவதழகோ' என்ற மெட்டு.

இராகம்—இ. தோடி தாளம்—ஆதி.

பல்லவி

புதுப்புன லினிமே லொய்யாரமா யாடுவோம்
புதுப்புன லினிமே லம்மா (பு)

அநு பல்லவி

எதிர்ப்பிலை யென்றே இயற்கையில் நன்றே
ஏகமாக முழங்கி வருகின்றதே (பு)

மதிப்புற வந்தே மாதரம் என்றே
வாம மேவி மகிழ்ந்து மன தாறவே (4)

பகுத்தறிவோடே பாரத நாடே
பாரிலே நம தன்னையென் றுணரவே (4)

வகுத்த சுதேச வழிகளில் நேசம்
மாறிடாது வகித்துயிர் பிழைக்கவே (4)

துயின்றது போதும் துணிவிலெப்போதும்
சோனை மாரி பொழிந்த திது சொல்லவே (4)

பயின்று நம் பாடை பரவி நம் ஆடை
பாக மாக வதிந்து முன்னடையவே (4)

உதய நற் காந்தி மதிய மெய் யேந்தி
ஊற்றி வருதமு துதவி மறுத்தலாம் (4)

மத வித்தியாசம் வளர்ச்சியின் நாசம்
வாழ்வு ஷாகுல் ஹமீதுரையைச்சூழ்வதே (4)

---

23. தாய் பாஷை. எ.

'நடராஜா' என்ற மெட்டு.

இராகம்—நாட்டை தாளம்—ஆதி.

பல்லவி

சிறந்தோமே—மனமகிழ்
தேயந் தோறும் தாயின் பாஷை யுயிரெனச் (சி)

அநு பல்லவி

மறந்தோமே—பிறமொழி
வாழ்வி லோதுந் தாழ்வை யீயு மிகவெனச் (சி)

சரணம்

அருந்தோமோ—அமுதினை
ஆவி மேன்மை யாகும் பான்மை யுளவொன்றை
அயர்ந்தோமோ—அலதிதில்
ஆசை தீர வேச தாவும் பருகிடச் (சி)

விருந்தோமோ—தினந்தினம்
வீடு தோறுஞ் சோறு போடு கெனச்சொல
விழைந்தோமோ—இலையிலை
வீண ரோகிர் வாண ரோவிப் புவியிடை (சி)

திரும்போமே—கெடுவழி
தீன ரேனும் பல வீன ரேனு மினி
விரும்போமே—இகழ்வதை
வீசியே வளர்சு தேச ராகிடவும் (சி)

பெரும்பேறே—வருமிதில்
பேத மாய் நினைவு ரூத தாலெமது
தரும்பேறே—திறல்வாத்
துங்க ஷாகுலமீ திங்க வாவுமுறை (சி)

---

24. சுதந்தரத் தீபம் அ.

'சுடச்சுட' என்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி தாளம்-ஆதி.

பல்லவி

சுதந்தரத்தீபம் ஜ்வலித்தியங்குதே—தெய்வீகத் தன்மை
தோன்றுநின்றேவிளங்குதே (சு).

அநு பல்லவி

மிதந்தவுற்சாகமே வீழாதபாகமே
விளைந்திடும் முப்போகமே
சதந்தவறுமலே தாழாவிவேகமே
தந்தாள வந்தேசி றந்தாகுமே
சகலரும் புயங் தழுவி யின்பொடு
தாய்நாடென்றே வணங்கிடச் (சு)

முயன்ற நம் பாரதா மூதாட்டியாரதாய்
முதிர்ந்தருரைச் சீரதாய்
சயந்தரும் பேரிகை சப்தாதி யீவதாய்த்
தக்கோ ருளத்தே மகிழ்க்காவதாய்
தமிழலைக்கட லமுதெடுத்துயர்
ஷாகுல் ஹமீதியம்பிடச் (சு)

தியங்குவ தின்மையாய்த் தேசியச்சாலையே
சிறந்திடும் இக்காலையே
பயந்தினியாங்கிலம் பாய்ந்தோடு மூலையே
பண்பாய்ந மிந்த்யா முனம்போலையே
பாவியெங்கணும் புகழுறும்படி
பாவாவிமோசனமெனச் (சு)

---

26. நமது ஆயுதம். கூ.

'என்னகேள்விமுறை' என்ற மெட்டு.
இராகம்-பிலகிரி தாளம்-ரூபகம்.

பல்லவி

சக்காராயுதமே—நம்மைத்
தாழாதே வாழச் செயுந்தவம் (சக்)

அநு பல்லவி

திக்கா—ரூபவ ரெக்கா—லமும திக்கா—நின்றது (சக்)

சரணம்

தள்ளரும் பேரறி வுள்ளநம் தாய்நிலம்
தன்னிலையாகவும் அன்னியரோட்டம்
தாமாய்க் —கொளவிரைவொடு
நோய்ச் —செயமடைகிற
தாவாய்த் —தெரிகிறவொரு (சக்)

வெள்ளையரைமிகக் கொள்ளையாமென
விள்ளவொண்ணுதினி யுள்ளதெண்ணுது
வித்தாய் —நமது
ரித்தாய் —உயிரின்
சத்தாய் —நின்றது (சக்)

நாட்டைக்கே வலகிலைமையிலாட்டப்பார்க் கிறமிடியெனுங்
காட்டுப்பே யகலவழிகை ராட்டினந்தானே
நலியா —திகழ்வினி
மலியா —தெவனுஞ்சீர்
சலியா —முறைதரும் (சக்)

வாட்டத்தே வதிநமைமகிழ் வீட்டத்தே வளருரிமையின்
கோட்டத்தே யனவாதமுங் கூட்டிப்பொன்னூடும்
வண்ணு —டல்லவென்
றென்னு —டுஞ்சொல
மூன்னு —கச்செயும் (சக்)

கப்பலுங் குண்டுங்கை வாளுந்துப்பாக்கியும்
காற்படை வேற்படை தேர்ப்படையாவும்
கணமே —யழிவுற்றிடு
வணமே —நிகரற்றுசு
வணமே —யிறைபெற்றிடும் (சக்).

வெப்பமிகுத்துவெ — றுப்பபடைபாமலே
செப்படிமைத்தொழி — லேகத்திராணி
மீதே —ஷாகுல்ஹ
மீதே —யோதிய
தோதே—யாவதும் (சக்)

27. இரண்டு முக்கிய சம்பவங்கள். ம.

'நாயகியேன் மாயவிருத்தாந்தம்' என்ற மெட்டு.
இராகம்—சகாண தாளம்—ஆதி.

க. சந்தியிலும் வந்தழுக லாச்சே—நம்
சாதிமுறை யாதியவும் போச்சே
அந்தமுற நின்றபெரும் பேச்சே—கெட்டு
ஆதாமில் லாதுவரு மூச்சே (சந்)

உ. சொந்தமதி யுந்தவறிப் போனோம்—துயர்
சொல்லிமுடி வில்லையென வானோம்
இந்தியமடந்தையெழில் காணோம்—இருந்
தென்ன விறந்தென்ன மகிழ் பூணோம் (சந்)

ங. கார்ட்டிகக் கேடடையும் சிரே—வந்த
ராணுவச்சகா விதியின் பேரே
சாடவும்பஞ் சாபிற்பெரியோரே—முதற்
றையலர்செங் கைமதலை யீரே (*)

ச. கூடினர்ஜா லியன்வாலாத் தோப்பே—அங்கு
கோரடயர்ப் பேயரிறு மாப்பே
சூடியவப் பீரங்கியின் தீர்ப்பே—செய்து
சுட்டதுகம் கெட்டவினைப் பூப்பே (சந்)

ரு. மிஞ்சியுமிருந்தவரைத் தேடி—ஐயோ
மேனிமெலிவித்தனர் விராடி

கொஞ்சிய குழந்தைகளும் வாடி—வீழக்
கொன்றனர் மகிழ்ந்து விளையாடி (சங்)

சு. வஞ்சியரைப் பங்கமிகப் படுத்தி—நல்ல
மானமற வீதிகளிற் கடத்தி
நெஞ்சின்வழியும்பரவி நடத்தி—மனம்
நேருமுறையேசெய்தனர் நிறுத்தி (சங்)

எ. சோதரர் சகோதரியர் பாரே—மிக்க
சோகமடைந் தாவியிழந்தாரே
பாதகமி தன்றியினி வேறே—இந்தப்
பாரிலறிந் துள்ளவர்கள் யாரே (சங்)

அ. நீதமென்பதோர்சிறிதும் இலையோ—அது
நெஞ்சுதிப்பினும்பெரிதுந்தொலையோ
சாதுநிறைந் துள்ளநிலக் கொலையோ—அர
சாங்கநெறிப் பாங்குணர்த்தும் நிலையோ (சங்)

கூ. என்றுமேநிகழ்ந்திடக் கண்டிலமே—என
எங்கணுங்கலங்கிவிடச் சலமே
ஒன்றினுமுண் டோதவுங்கேவலமே—நம
தூதியமல் லாமலில்லை நலமே (சங்)

ய. சென்றுதனி நம்பொருளுங் கொடுத்தோம்—பின்னர்
செப்பரிய வெற்றியினைத் தொடுத்தோம்
நன்றியிதைக் கொன்றிரத்தங் குடித்தோம்—எனும்
ராஜநிலை காணுவதை யடுத்தோம் (சங்)

யக. பொக்கெனமுஸ்லீம்களுயிர்த் தலமே—எனும்
புண்ணியநிலங்களையவலமே
மிக்கவுமியற்றமனப் பலமே—அவர்
மேவினர்விடுத்தனர் வற்சலமே (சங்)

28. தேசீயக் கல்வி. ௰௧.

'காக்ஷிகண்காக்ஷியே' என்ற மெட்டு.

இராகம்-கமாசு தாளம்-ஆதி.

பல்லவி

தேசீயக் கல்வியே—சிறந்ததுயர்ந்தவர்க்குத் (தே)

அநு பல்லவி

மாசீவனுர்த்தமெலார்க்கு‡மு தாசீனராட்டவிமோச்சன (தே)

சரணம்

தெளிந்தநல்லறிவுடன் சீரும்பெறக்கொடுக்கும்
தேகமெடுத்தபயன் செகத்திற்றெரியவைக்கும்
ஒளிந்தவைதீகமெல்லாம் ஓடிவரக்கணிக்கும்
ஊமர்களுக்குமொழி யூட்டிவளர்த்தெடுக்கும்
உத்தமகுணத்தினையுண்டாக்கும்—நம்
சித்தமயக்கத்தையறப்போக்கும்—அகி
லத்திடைநலத்தைமிகத்தேக்கும்—புகழ்
தத்துவமிகுத்துயர்வூக்கும்
தாரணியின்மூச்சு தாவுயிரின்பூச்சு
தாயழகுப்பேச்சு சாசுவதமாச்சு நம் (தே)

அழிந்தமதப்பேதகம் அடியறத்தொலைத்திடும்
அன்னைநிலம்பிறந்தார்க் காவியொன்றளித்திடும்
இழந்தசுதந்தரங்கொண் டிலகவிடுவித்திடும்
ஏகனொருவனுண்டென் றெவர்க்குமறிவித்திடும்
எத்தகையசித்தினையுங்காட்டும்—நம
தீடெடுப்பில்லாவுயர்வைமூட்டும்—உயர்
சத்தியவேதத்தைநிலைநாட்டும்—இனிச்
சாதுக்களுறக்கழகங்கூட்டும்

---

‡ உதாசீனர்—அன்னியர்

தருமந்தலைதூக்கும் சகலரையுங்காக்கும்
பாதக்கொடியார்க்கும் பயனையுள்ளவாக்கும் நம்(தே

---

29. தமிழ். ௰௨.

'ஆறுமுக வடி வேலவனே' என்ற மெட்டு.
இராகம்—செஞ்சுருட்டி தாளம்—ரூபகம்.

சந்தனமாமல யந்தயவாகத் தவழ்ந்துவருந் தமிழே—மூன்று
சங்கமிர்வாகம் புரிந்திணை யேதெனத் தங்குமிருந்தமிழே ௧.

அந்தரமாதி வியந்திடவைகை யெதிர்ந்து வருந் தமிழே—தன்னை
அண்டிடுவாரையு வந்தருளேபுரி யந்தமிகுந்தமிழே ௨.

சத்தியமாகியொ ருப்பிடையேகித் தழைத்து வருந்தமிழே—பூவில்
தக்கவரோதக்க லப்பிலதர்கித் தனித்த செழுந் தமிழே ௩.

முத்திறமானச முத்திரமாய்ருசி முற்றி வருந் தமிழே—எங்கும்
முச்சுடராகிநி லைத்தறிவோருள் முளைத்துயருந் தமிழே ௪.

நெற்றிவிழிச்சிவ னைப்புலவர்க்கிடை நிற்கவிடுந் தமிழே—உள்ளம்
நெக்குருகிக்கரை யற்றமகிழ்ச்சி நினைக்க வருந் தமிழே ௫.

புற்றரவத்தைம யக்கிரதத்தொனி புக்கிய நற்றமிழே—மாந்தர்
புத்திவிளக்கியு யர்த்திநி றுத்திப் புதுக்குதவத்தமிழே ௬.

காவலர்மாமுடி மேல்டியாமலர் மேவிடுமாந் தமிழே—குன்றாக்
காம வசிகர கோமள சீதள காரணமாந் தமிழே ௭.

பாவல ஷாகுல மீதுயி ராதிப ராவிய நீந்றமிழே—என்றும்
பாவிய ராவருன் னுதார மேவலர் பாரிலுலாந்தமிழே ௮.

---

30. நமதுரிமை. ௰௩.

'முருகன் திருமால்மருகன் பெருமை' என்ற மெட்டு.
இராகம்—அடாணா தாளம்—ரூபகம்.

பல்லவி

மனமே யிந்தத் தீமதி யார் புகன்றார்?—மிக்க
மன்றாடிச் சொன்னவைம றைந்தோடச் செய்தபப (ம)

அநு பல்லவி

தினமேயிகழ் தேசத்துரோகியர்
செப்புந்திற லதுகண்டுல கொப்புந்திற லறகபந்தனோ (ம)

சரணம்

மாசற்ற ஜென்மத் துதித்தவனென்று
வழுத்த மன தில்லையோ—பிறர்
வாதிக் துறுவிலங் கென்னி லையையோகம்
வாழ்விற் குறை யில்லையோ
பேசத் தகுந்தவற்றைத் தீவிரத்தொடு
பேசவும் வாயில்லையோ—மதி
பேதித்ததோ வன்றித் தேய்வுற்றதோ சற்றும்
பேணற் கமைந்தில்லையோ
நாசப்படுகுழி வீழுவதோநலம்
நல்லனசெய்திடற் கோமனதாகுலம்
நயவஞ்சகர் மொழிநம்பினர் நடுவண்புன லழிவுண்டனர் (ம

நேசத்துறும்பெண்டு பிள்ளையின் மானத்தை
நேருவதுந் தொல்லையோ—சொல்லும்
நீசத்துவப்பெய ரேசற்று மின்றி
நிவர்த்தித்தல்கன் றில்லையோ
தேசத்துட னொத்து வாழ்வதை விட்டுத்
திறக்கிறதும் பல்லையோ—எங்கும்
தெய்வச் சினங்கொடி தென்னப் பெரியவர்
செப்பத் தெரிந்தில்லையோ
காசைக்கவி வல்ல ஷாகுல்ஹமீது
கனியுமிசைத்தமிழ் கண்டேயிப்போது

கதிபெற்றிட முறைமைப்படி சதியற்றிடு மதிபெற்றிடு (ம)

---

31. மிசு.

'ஸ்ரீராமசேவை' என்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி தாளம்-ஆதி.

பல்லவி

பாஷாபிமானம் பெருகத் தமிழ்க்கவி

பாடியென்னளு மகிழ்ந்திடுவோம்

அநு பல்லவி

தேசாபிமான விலாசா னுகூலம்

சிறந்தவர் பேரைப் புகழ்ந்திடுவோம் (பா)

தோஹையரா

தேசாடுமிந்தியத் தாய்நாடு தன்னைத் தினம் பணிந்தோன்

ஆசார மெங்கிலுங் குன்றுதிருக்கத் தன் ஆவிதந்தோன்

பாட்டு (முடுகு)

தினகரனெனமிக வுயருந்தயாளன்

மனிதர்கள்நலமதை மருவுங்குணுளன்

தென்காசை யன்கீத ஷாகுல்ஹமீது

தெரிந்தோதுகின் றநற்காந்திமகான் (பா)

தோஹையரா

காஷாய வேடமிட் டேமாற்றுகின்ற தற்காலத்திலே

ஆசார்யனுகிவங் தன்னோரியற்றுரு தாலத்திலே

பாட்டு (முடுகு)

கனிவுடனருளிய மலி யுபகாரன்

மனவலிபெருகிய தரும வுதாரன்

கண்கண்ட தெய்வமென் றேதுமித் தாரணிக்

காருண்ய [illegible] காந்திமகான் (பா)

12447

இரண்டாந்தொகுதி முற்றுப்பெற்றது.